## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண். 932/2015

வா.சா.1 **நவீனா**

**17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1 ம் பிரதிவாதியும், அவரது சித்தப்பா கருப்பணகவுண்டர் பூர்வீக சொத்துக்களில் ஒரு சில சொத்துக்களை பொறுத்தமட்டில் 10.07.1998 ஆவணப்படி பாகப்பிரிவினை செய்து கொண்டு அந்த பாகப்பிரிவினையில் ஏ அட்டவணை சொத்தானது 1 ம் பிரதிவாதி வாரணவாசி கவுண்டருக்கும், பி அட்டவணை சொத்து கருப்பணவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், தாவா சொத்தின் ஒரு அயிட்டமான 269/3 காலையில் உள்ள 35 சென்ட் பூமியானது மேற்படி பாகப்பிரிவினையில் வாரனவாசி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்தில் கண்டுள்ள முதல் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பிவாசாஆ.1** ஆகும். மேற்படி ஆவணமானது எங்களது உரிமையை கட்டுப்படுத்தாது.

1 ம் பிரதிவாதி வாரனவாசி கவுண்டருக்கு 3 சகோதரிகள் என்றால் சரிதான். அவர்கள் 7.11.2004 தேதியில் பிதுராஜிதசொத்துக்களில் தங்களுக்கு பாத்தியப்பட்ட உரிமையை 1 ம் பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலை செய்து வாசாஆ.4 ஆவணப்படி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வாசாஆ.4 விடுதலை பாக பாத்திய ஆவணத்தில் முதல் அயிட்ட சொத்தில் 35 சென்ட் பூமியான கச.269/3 காலையிலும், கச.269/4 காலையில் 65 சென்ட் பூமியும் விடுதலை செய்து கொடுத்ததாக சொத்து விபரத்தில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பாக பாத்திய ஆவணத்திலேயே மேற்கண்ட சொத்துக்கள் எல்லாம் பூர்வீக சொத்துக்கள் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியின் மகன்கள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் கச.269/3 காலையில் உள்ள 35 சென்ட் பூமியை வாசாஆ.11 கிரைய ஆவணத்தின்படி ஒரு சுப்பிரமணியத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அந்த ஆவணம் என்னை கட்டுப்படுத்தாது.

மேற்படி கிரையமானது 1 முதல் 4 பிரதிவாதிகளின் பொது அதிகாரம் பெற்ற முகவரான ஒரு ரங்கசாமி என்பவர் மூலமாக கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என்னுடைய உரிமையை மறைத்து கிரையம் கொடுத்துள்ளார்கள். கச.269/3 காலையில் உள்ள 35 செண்ட் பூமியை ஒரு சுப்பிரமணியம் என்பவர் தனது பொது அதிகாரம் பெற்ற முகவர் வடிவேல் என்பவர் மூலமாக வாசாஆ.12 கிரைய ஆவணத்தின்படி 17 முதல் 19 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அந்த கிரைய ஆவணம் எனது உரிமையை கட்டுப்படுத்தாது. 17 முதல் 19 பிரதிவாதிகள் தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு 269/3 காலையில் உள்ள 35 செண்ட் பூமியை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், மேற்படி கிரைய விபரம் எனக்கு நேரில் தெரியும் என்றும், எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பிரச்சனையை கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 4 பிரதிவாதிகள் 269/3 காலையில் உள்ள 65 செண்ட் பூமியை 28.1.2009 தேதியில் 17 முதல் 19 பிரதிவாதிகளிடமிருந்து தகுந்த பிரயோஜனம் பெற்றுக் கொண்டு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், மேற்படி கிரைய ஆவணமானது எனது உரிமையை மறைத்து பெயரளவில் பெறப்பட்டுள்ளதால் அந்த கிரையமானது எனது பங்குரிமையை கட்டுப்படுத்தாது. மேற்படி கிரைய ஆவணம் **பிவாசாஆ.2** ஆகும். 1 முதல் 4 பிரதிவாதிகள் பிவாசாஆ.2 கிரையத்தை அவர்களது பொது அதிகாரம் பெற்ற முகவரான ஒரு பெரியசாமி என்பவர் மூலமாக கொடுத்துள்ளார்கள் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் கண்டுள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் கடந்த 18.9.2007 தேதியில் மேற்படி பெரியசாமிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது, என்னுடைய பங்குரிமையை மறுக்கும் விதமாக மேற்படி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. 18.9.2007 தேதியிட்ட பொது அதிகார ஆவணமானது **பிவாசாஆ.3** ஆகும்.

269/3 காலையில் உள்ள 35 செண்ட் பூமியும், 269/4 காலையில் உள்ள 65 செண்ட் பூமியும் ஆக மொத்தம் ஒரு ஏக்கர் பூமியை 17 முதல் 19 பிரதிவாதிகள் வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 ஆவணங்களின்படி கிரையம் பெற்ற விபரம் எனக்கு நேரில் தெரியும் என்றால் சரியல்ல. கிரைய தேதியில் இருந்து மேற்படி சொத்துக்கள் 17 முதல் 19 பிரதிவாதிகள் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி சண்முகம் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான், அவரை சிவசண்முகம்

என்று அழைப்பார்கள் என்றாலும் சரிதான். என் தாயர் பெயர் சிவகாமி என்றால் சரிதான். என் அப்பாவிற்கும், அம்மாவிற்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 13.9.2007 தேதியில் வாசாஆ.1 ஆவணப்படி விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சண்முகத்திற்கும், சிவகாமிக்கும் பிறந்தவர்கள் தான் வாதியாகிய நானும், 5 ம் பிரதிவாதியும் என்றால் சரிதான். என் தாயார் ஆரம்பத்தில் இருந்தே அவரது பெற்றோர் வீட்டில் தான் இருந்து வந்தார். நானும், 5 ம் பிரதிவாதியும் என் அம்மாவுடன் தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். என் தாயார் என் தகப்பனாருக்கு எதிராக தனக்கு ஜுவனாம்சம் வேண்டமென்றோ அல்லது எங்களுக்கு சொத்துக்கள் வேண்டுமென்றோ வழக்கு நடவடிக்கை எதேனும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி கடந்த 2010 ம் வருடம் மேஜர் ஆனார் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி 17 முதல் 19 பிரதிவாதிகள் வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 ஆவணத்தின்படி பெற்ற கிரையத்தை ஆட்சேபித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் எங்களுக்கு மேற்படி ஆவணங்களின் விபரம் எதுவும் தெரியாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 ஆவணத்தின்படி 17 முதல் 19 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற ஆவணத்தில் Eo நாமினியாக கண்டு எழுதப்படவில்லை என்றால் எங்களை மறைத்து மேற்கண்ட ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். 1 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்த போது 2021 ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலம் வரை கூட்டுகுடும்பமாக இருந்து பிரிவினை எதுவும் இன்றி குடும்பத்தின் தலைவராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல குடும்பத்தில் சண்டை ஏற்பட்டு காவல்நிலையம் வரை பிரச்சனை சென்றது. 1 ம் பிரதிவாதி இறக்கும்வரை கூட்டு குடும்ப தலைவராக இருக்கவில்லை என்ற விபரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றும், என்னுடைய வழக்கிலேயே வாரனவாசி கவுண்டரும் அவரது 3 மகன்களும் கூட்டு குடும்பமாக இருந்து வந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் ஆனால் வாரனவாசி கவுண்டர் கூட்டு குடும்பத்தின் தலைவராக இருக்கவில்லை.

1 ம் பிரதிவாதி வாரனவாசிகவுண்டரும் அவரது மகன்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டு குடும்பத்திற்கு அவசியமற்ற செலவுகளை செய்ததாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவர்கள் எங்களுக்காக எதுவும் செய்யவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 17 முதல் 19 பிரதிவாதிகளுக்கும், இதர பிரதிவாதிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பவில்லை. 1 ம் பிரதிவாதி 2021 ம் வருடம் இறக்கும் வரை 1 முதல் 5

பிரதிவாதிகள் அடங்கிய கூட்டு குடும்பத்திற்கு 1ம் பிரதிவாதி கர்த்தாவாக இருந்து குடும்ப அவசியத்திற்காக வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 ஆவணத்தின்படி தகுந்த பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு கிரையம் கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 17 முதல் 19 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் குறுக்கீடு செய்ய எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக காட்டி பிரிவு 37 (1) ன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. 17 முதல் 19 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாததால் சுவாதீன பரிகாரமும் கேட்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், அதன் அடிப்படையிலும் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பானது ரூபாய் 20 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள சொத்தும் அதனால் இந்த வழககானது இந்நீதிமன்ற பண ஆள்வரை அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்றும், தாவா சொத்தின் மதிப்பை குறைத்துக்காட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17 முதல் 19 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 கிரைய ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரப்படவில்லை என்றால் அந்த ஆவணமானது எனது உரிமையை கட்டுப்படுத்தாது என்ற காரணத்தினால் அந்த ஆவணங்களை ரத்து செய்ய வேண்டிய பரிகாரம் கோரத்தேவை இல்லை. நீதிமன்ற முத்திரை கட்டணத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தாவா சொத்தின் மதிப்பு குறைத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 17 முதல் 19 பிரதிவாதிகள் நல்லஎண்ண கிரையதாரர்கள் என்றும், அவர்கள் தகுந்த பிரதிபிரயோஜனத்தின்பேரில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது 18,19 பிரதிவாதிகள் 17ம் பிரதிவாதிக்கு வாசாஆ.12 மற்றும் பிவாசாஆ.2 கிரைய ஆவணப்படி கிரையம் பெற்ற சொத்துகளில் தங்களது பங்குரிமையை கடந்த 21.10.2020ம் தேதியில் பாகபாத்திய விடுதலை செய்து கொடுத்து தற்போது 17ம் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, 21.10.2020 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணமானது பெயரளவில் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். 21.10.2020 தேதியிட்ட பாக பாத்திய விடுதலை பத்திரம் **பிவாசாஆ.4** ஆகும். 18, 19 பிரதிவாதிகள் தங்களது பங்குரிமையை 17ம் பிரதிவாதிக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டதால் மேற்கொண்டு அவர்கள் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக தொடரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 17 முதல் 19 பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணத்தின்படி காலவரம்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கிரைய ஆவணங்களில் என்னையும், என் சகோதரரையும் சேர்க்காமல் கிரையம் கொடுத்தது தான் எங்களது தரப்பு ஆட்சேபணையா என்றால் இல்லை. எங்களது உரிமைக்காகத்தான் இந்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 1 முதல் 4 பிரதிவாதிகள் பாகம் பிரிக்கப்படாத கூட்டு பங்கு உரிமையாளர்கள் என்று ஏற்றுக்கொண்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 17 முதல் 19 பிரதிவாதிகள் தகுந்த பிரதிபிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளதால் சமஉரிமை அடிப்படையில் தாவா சொத்தில் 17 முதல் 19 பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணத்தின்படி சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பல அயிட்ட சொத்துக்களை காண்பித்து தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனக்கு பாகம் கிடைக்கும்பட்சத்தில் 17 முதல் 19 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களை தவிர்த்து ஏனைய அயிட்ட சொத்துக்களை எடுத்துக்கொள்ளலாம் என்றால் நீதிமன்ற உத்தரவின்படி ஒதுக்கும் சொத்துக்களை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளோம். வழக்கு தாக்கல் செய்த பிறகு தாவா சொத்து சம்பந்தமாக ஏதாவது பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் போன்மூலமாக கேட்டோம் ஒப்புக்கொள்ளவில்லை.

மக்கள்நீதிமன்றத்தின் மூலமாக சமரசம் செய்து கொள்ள நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் என்னுடைய பிடிவாதத்தின்பேரில் இந்த வழக்கை நடத்தி வருவதால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**